(6) அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே;

''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 17/1979)'' சட்டமாக நிறைவேற்றவேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1979) '' ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3, அட்டவணை பேரவையின் முடிவிற்குப் விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு. 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1979) சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

7. வரவு-செலவுத் திட்டம் 1979—80 வாக்கெடுப்பு—

கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவு.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு—என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,69,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. சு. பாலன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாட்டில் பத்திரப் பதிவு ஆகும் தொகை அதிகமாகவுள்ளதால், செலவைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்வது பற்றி'' விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,69,36,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''நீதிமன்றங்களில் அசையா பொருட்கள் (நிலம், வீடு) மீது இணைப்பு உத்தரவு விதிப்பதை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்துக்கு தகவல் கொடுக்க ஏற்பாடு செய்யாமலிருப்பதால்''—